# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 18 | 4 Pages | 19.08.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 18 | 4 பக்கங்கள் | 19.08.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## கச்சத்தீவு ஒப்பந்தத்தில் கருணாநிதி கையெழுத்திடவில்லை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம்

ராமநாதபுரம், ஆக. 19

கச்சத்தீவு நமக்கு சொந்தம் என்பதற்கானஆதாரங்களைபிரதமரிடம் கொடுத்தார். கச்சத்தீவை மீட்டெடுத்து தமிழ்நாடு மீனவர்களின் மீன்பிடி உரிமையை காப்போம்.

மண்டபத்தில் நடந்த மீனவர் மாநாட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது: பிரதமர் நரேந்திர மோடி சென்னை வரும் போதெல்லாம் கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் வலியுறுத்தி வருகிறேன். ஏன் கடந்த வாரம் இலங்கை அதிபர் இந்தியாவுக்கு வந்தபோது கூட கடந்த 19ந்தேதி பிரதமருக்கு இதுதொடர்பாக நான் கடிதம் எழுதி இருந்தேன். ஆனால் இங்கு இருக்கக்கூடிய சிலர், இதற்கு தி.மு.க. தான் காரணம் என கூறி வருகிறார்கள். ஆனால் கச்சத்தீவைபொருத்தவரைமுழுஉரிமை தமிழ்நாட்டிற்கு தான் உண்டு என்பதற்கான ஆதாரங்களை 1973ம் ஆண்டு டிசம்பரில் அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி வெளியிட்டார். அதையும் மீறி தான் 1974 ம் ஆண்டு ஜூன் 26ந் தேதி கச்சத்தீவு ஒப்பந்தம் இந்தியாஇலங்கை பிரதமர்களால் செய்து கொள்ளப்பட்டது. இது ஒப்பந்தம் தானே தவிர, சட்டம் அல்ல. அப்படி எந்த சட்டமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. அதை



தி.மு.க.வும் ஆதரிக்கவில்லை. ஒப்பந்தம் செய்தவுடன் உடனடியாக டெல்லி சென்று பிரதமர் இந்திரா காந்தியை அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி சந்தித்தார். கச்சத்தீவு நமக்கு சொந்தம் என்பதற்கானஆதாரங்களைபிரதமரிடம் கொடுத்தார்.

அன்றைக்கு சட்ட அமைச்சராக இருந்த மாதவனும், கருணாநிதியுடன் சென்றார். சென்னையில் இதே ஆதாரங்களை வைத்து மறுபடியும் ஆதாரங்களை வெளியிட்டார். அதன்படி கச்சத்தீவு என்பது இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக எந்த காலத்திலும் இருந்ததில்லை. போர்ச்சுகீசியர் மன்னர் காலத்து வரைபடங்கள் கூட அப்படித்தான் சொல்கின்றன. 1954ம் ஆண்டு இலங்கை அரசு வெளியிட்ட வரைபடத்திலும் கச்சத்தீவு அவர்களுடையது என்று சொல்லப்படவில்லை. கரையோரத்தில் சங்கு எடுக்கக்கூடிய உரிமை ராமநாதபுரம் ராஜாவுக்கு தான் இருந்தது என்பதை காட்ட ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்கு சங்கு எடுத்ததற்காக அவர் எந்த காலத்திலும் இலங்கை அரசுக்கு கப்பம் கூட கட்டியது கிடையாது. கச்சத்தீவு இந்தியாவுக்கு தான் சொந்தமானது என்பதற்கான முழு ஆதாரத்தையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் பாராளுமன்றத்திலேயே வழங்கினார்.

அதாவது 29.6.1974 அன்று அனைத்து கட்சிக் கூட்டத்தை அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி கூட்டினார். கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளும் ஆதரித்த அந்த கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்த ஒரேகட்சி அ.தி.மு.க. தான். அன்று முதல் இன்று வரை கச்சத்தீவு விவகாரத்தில் அ.தி.மு.க. தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்து வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில்கச்சத்தீவுஒப்பந்தத்தை எதிர்த்து சிறப்பு தீர்மானம் கொண்டு வந்தவர் கருணாநிதி. தி.மு.க. சார்பில் 1974ம் ஆண்டு ஜூலை 14ந் தேதி தொடங்கி 45 முக்கிய நகரங்களில் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டன. தஞ்சாவூரில் கருணாநிதி, சென்னையில் அன்பழகன் பேசினார்கள். ஸ்ரீபெரும்புதூரில் நடந்த கூட்டத்தில் நான் பேசினேன். இந்த வரலாறு தெரியாமல் குறைந்தபட்ச நேர்மைகூட இல்லாமல் சிலர் பேசி திரிவது வெட்கக்கேடானது, கண்டிக்கத்தக்கது. கச்சத்தீவு ஒப்பந்தத்தில் கருணாநிதி கையெழுத்திடவில்லை. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை மறுக்கப்படுவதால் இந்திய அரசு இலங்கை அரசுடன் போட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கான முயற்சியில் இறங்க வேண்டும். அதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை மத்திய அரசு தொடங்க வேண்டும். பா.ஜனதா அரசு இதற்கான முயற்சியில் இறங்கவில்லை என்றால் அடுத்து நடைபெறக்கூடிய பாராமன்ற தேர்தலுக்குப் பிறகு அமைய கூடிய புதிய அரசு இதனை நிறைவேற்ற கூடிய வகையில் நமது நடவடிக்கைகளை மேற்கொள்வோம். கச்சத்தீவை மீட்டெடுத்து தமிழ்நாடு மீனவர்களின் மீன்பிடி உரிமையை காப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

## மகள்களுக்கு பாலியல் சித்ரவதை: 702 வருடம் சிறை தண்டனை விதித்து நீதிபதி அதிரடி



மலேசியா, ஆக. 19

தென்கிழக்கு ஆசிய நாடான மலேசியாவில் கிரிமினல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகிறது. அதிலும் பாலியல் குற்றங்களுக்கு பிரம்படியுடன் கூடிய பல வருட சிறை தண்டனை அங்கு வழக்கமான ஒன்று. மலேசியாவின் ஜொஹோர் மாவட்டத்தில் உள்ளது முவார். இங்குள்ள 53 வயதான சுகாதார பணியாளர் ஒருவருக்கு 12 மற்றும் 15 வயது நிரம்பிய இரு மகள்கள் இருக்கின்றனர். இவர் 2018ம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு ஜூலை வரை, தனது சொந்த மகள்களை முவார் பகுதியிலுள்ள பக்ரி மற்றும் ஜலன் ஜெரம் டெபி எனும் இரு பகுதியிலுள்ள வீடுகளில் கொண்டு சென்று பாலியல் தாக்குதல் நடத்தியுள்ளார். இவரது இந்த கொடூர செயலால் 2 மகள்களில் ஒரு மகள் கர்ப்பமடைந்திருக்கிறார். இதனையடுத்து இந்த பணியாளர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்பட்டு குற்றம் உறுதி செய்யப்பட்டது. காவல்துறை சார்பாக ஆஜரான துணை அரசு வழக்கறிஞர் இவருக்கு மிக கடுமையான தண்டனை வழங்குமாறு கோரிக்கை வைத்தார். ஆனால் குற்றவாளியான அவரது தந்தை, தனக்கென வக்கீல் வைத்து கொள்ளாமல், குற்றத்தை ஒப்பு கொண்டு, தான் மனம் வருந்துவதாகவும் அதனால் தனக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறும் நீதிபதியிடம் கோரிக்கை வைத்தார். இதனை ஏற்க மறுத்த நீதிபதி அபு பக்கர் மனத், குற்றவாளி தனது கொடுமையான குற்றத்திற்காக உண்மையிலேயே வருந்தும் வகையில் அவருக்கு 702 வருட சிறைத்தண்டனையும், இத்துடன் 234 பிரம்படியும் கொடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். சமீபத்தில் இதே போல், தனது 15 வயது மகள் மீது பாலியல் தாக்குதல் நடத்திய குற்றத்திற்காகஜொஹோரில்ஒருவருக்கு218வருடசிறைத்தண்டனையும், 75 பிரம்படியும் தண்டனையாக வழங்கப்பட்டது. மலேசியாவில் பாலியல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவது போல் இந்தியாவிலும் கொண்டு வரப்பட வேண்டும் என சமூக வலைதளங்களில் பயனர்கள் தெரிவிக்கின்றனர்.

## அமெரிக்க அதிபர் பதவி.. இந்திய வம்சாவழி வேட்பாளருக்கு எலான் மஸ்க் பாராட்டு

அமெரிக்கா, ஆக. 19

பிரபல தொலைக்காட்சிக்கு விவேக் ராமஸ்வாமி பேட்டியளித்தார் விவேக் ராமஸ்வாமி மிகவும் நம்பிக்கைக்குரிய வேட்பாளர் மேலும் படிக்க உலகின் மிகப்பெரும் வல்லரசு நாடான அமெரிக்காவில், 2024 நவம்பரில் அதிபர் மற்றும் துணை அதிபருக்கான தேர்தல் நடக்க இருக்கிறது. ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகளின் வேட்பாளர்கள் மட்டுமே தற்போது வரை களத்தில் இறங்க இருக்கின்றனர். ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மீண்டும் போட்டியிட ஆர்வமாக உள்ளார். குடியரசு கட்சி சார்பில் போட்டியிட முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தீவிரமாக இருக்கிறார். ஆனால் அவர் மீது உள்ள வழக்குகளின் தீர்ப்புகளை பொறுத்தே அவர் போட்டியில் இருப்பாரா இல்லையா என தெரிய வரும். இந்நிலையில் குடியரசு கட்சி சார்பிலேயே 10க்கும் மேற்பட்டவர்கள் வேட்பாளராக போட்டியிட ஆர்வம் தெரிவித்துள்ள நிலையில் அக்கட்சியிலேயே நிக்கி ஹேலி, ஹிர்ஷ் வர்தன் சிங், மற்றும் விவேக் ராமஸ்வாமி ஆகிய 3 இந்திய வம்சாவளியினரும் தீவிரமாக களம் இறங்கி இருக்கின்றனர். இவர்கள் அனைவரிலும் மிகவும் வயது குறைந்தவரும், ஹார்வர்டு மற்றும் யேல் பல்கலைகழகங்களில் பட்டம் பெற்றவரான விவேக் ராமஸ்வாமி, கேரளாவிலிருந்து அமெரிக்காவிற்கு குடியேறிய இந்திய பெற்றோர்களுக்கு பிறந்தவர். பல அதிரடி திட்டங்களையும், கருத்துக்களையும் கூறி வரும் விவேக், அமெரிக்காவில் வாக்களிக்கும் வயதை 25 ஆக அதிகரிக்க வேண்டும் என வாதாடுகிறார். சில மாதங்களுக்கு முன் உலகின் நம்பர் 1 பணக்காரரான அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க், தனது சீன சுற்றுபயணத்தின் போது தெரிவித்ததாவது, "அமெரிக்காவும், சீனாவும் ஒட்டிப்பிறந்த இரட்டை குழந்தைகள். சீனாவில் எனது வர்த்தகத்தை விரிவுபடுத்த போகிறேன். சீனாவின் சக்தியையும், நம்பிக்கையையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்," என்று அவர் கூறியிருந்தார். ஆனால் இதை குறிப்பிட்டு மஸ்கை விமர்சித்திருந்தார் விவேக். அப்போது அவர், "டுவிட்டரை எக்ஸ் என மாற்றி மேம்படுத்தும் முயற்சியை ஆதரிக்கிறேன். அதே வேளையில், சீனா தனது மறைமுக நோக்கங்களுக்காக அமெரிக்காவின் முக்கிய தொழிலதிபர்களை பொம்மைகளை போல் இயக்குவதை எதிர்க்கிறேன். இதற்கு அமெரிக்கர்கள் கருவிகளாக போய் விட கூடாது. இதனை எதிர்க்கும் தலைமை வேண்டும்," என்று விமர்சித்து இருந்தார். இந்நிலையில் டக்கர் கார்ல்ஸன் எனும் ஒரு பிரபல தொலைக்காட்சி பேட்டியாளருக்கு விவேக் ராமசாமி பேட்டியளித்தார். இப்பேட்டியின் வீடியோவை இணைத்து தனது எக்ஸ் (டுவிட்டர்) கணக்கில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளார் எலான் மஸ்க். தன்னை விமர்சித்த விவேக் ராமசாமியை, ஆச்சரியப்படும் விதமாக மஸ்க், "ஒரு நம்பிக்கைக்குரிய வேட்பாளர்" என பாராட்டியுள்ளார். இந்திய வம்சாவழியை சேர்ந்த ரிஷி சுனாக், பிரிட்டன் பிரதமராக இருந்து வரும் நிலையில், அமெரிக்காவிலும் அதே போல் ஒருவர் வரவேண்டும் என பல இந்தியர்கள் விரும்புகிறார்கள். வைரலாகியிருக்கும் இந்த வீடியோவை கண்ட இந்தியர்கள், தன்னை விமர்சித்தவராக இருந்தாலும் விவேக் ராமசாமியின் தலைமை மற்றும் திறமை குறித்து எலான் மஸ்க் நம்பிக்கை தெரிவித்திருப்பதை கண்டு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



## பாதாள சாக்கடை அமைக்க கோரி மேயரிடம் மனு

திருப்பூர், ஆக. 19

கே.எம். நகர் பகுதியான 8 வீதிகளுக்கும் தார்சாலை அமைப்பதாக திருப்பூர் மாநகராட்சியால் அறிவிக்கப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை அமைக்காமல் தார்சாலை அமைப்பதற்கு வேலை தொடங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி 52வது வார்டு, கே.எம். நகர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் மேயரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாநகராட்சி 52 வது வார்டுக்குட்பட்ட



வெள்ளியங்காடு தெற்கு கே.எம். நகர் பகுதியான 8 வீதிகளுக்கும் தார்சாலை அமைப்பதாக திருப்பூர் மாநகராட்சியால் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஸ்மார்ட் சிட்டியில் பாதாளசாக்கடையும் சேர்த்து தார்சாலை அமைக்கப்படுகிறது. ஆனால் எங்கள் பகுதியில் மட்டும் பாதாள சாக்கடை அமைக்காமல்தார்சாலைஅமைப்பதற்கு வேலை தொடங்கப்பட்டுள்ளது. எங்கள் பகுதியில் பாதாளசாக்கடை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் கூறியுள்ளனர்.

## புதையல் எடுத்து தருவதாக கூறி ரூ.35 லட்சம் மோசடி திருப்பூர் வாலிபரை காரில் கடத்திய 5 பேர் கும்பல் கைது

திருப்பூர், ஆக. 19

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி அண்ணாநகர் 2வது வீதியை சேர்ந்த கருப்புசாமி மகன் பாலாஜி (33). இவரை ஒரு கும்பல் நேற்று காரில் கடத்தி செல்வதாகவும், அவரை மீட்கு மாறும் ஈரோடு மாவட்ட எஸ்.பி., அலுவலகத்திற்கு திருப்பூர் மாவட்ட போலீசார் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சோதனைச்சாவடிகளில் போலீசார்உஷார்படுத்தப்பட்டனர். இந்தநிலையில் ஈரோடு மாவட்ட எல்லையில் உள்ள சின்னப்பள்ளம் சோதனைச்சாவடியில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த 2 கார்களை நிறுத்தி விசாரணை நடத்தினர். அப்போது ஒரு காரில் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட பாலாஜி இருந்தார். அவரை போலீசார் மீட்டனர். மேலும் அவரை கடத்தி சென்ற கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் சைதலியை சேர்ந்த சிவக்குமார் (35), கோவிந்தராஜ் (36), சபியுல்லா (30), குட்டூரை சேர்ந்த பிரபு (29) , செம்ப டம்புத்



தூரை சேர்ந்த ராமச்சந்திரன் (36) ஆகியோரை போலீசார் சுற்றி வளைத்து பிடித்து கைது செய்தனர். காரையும் பறிமுதல் செய்தனர். 5பேரும் பாலாஜியை கடத்தியதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தினர். அப்போது திண்டுக்கல் மாவட்டம் பழனியை சேர்ந்த சாமியார் கதிரவன் தன்னிடம் புதையல் இருப்பதாகவும் ரூ.35 லட்சம் தந்தால் அதனை எடுத்து கொடுப்பதாக தனது நண்பரான பாலாஜியிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து அவர் கடத்தல்வழக்கில்கைதானசிவக்குமார், கோவிந்தராஜ், சபியுல்லா, பிரபு, ராமச்சந்திரன் ஆகியோரிடம் தெரிவித்துள்ளார். அதனை நம்பிய 5பேரும் ரூ.35 லட்சத்தை பாலாஜியிடம் கொடுத்துள்ளார். அதனை அவர் சாமியார் கதிரவனிடம் கொடுத்துள்ளார். அதனை பெற்றுக்கொண்ட கதிரவன் தலைமறைவாகி விட்டார். நீண்ட நாட்களாகியும் பாலாஜி புதையலை எடுத்து கொடுக்காததால் நேற்று 5 பேரும் பாலாஜியை தேடி திருப்பூர் வந்துள்ளனர். அப்போது 5 பேரும் புதையலை கொடுக்கா விட்டால் ரூ.35 லட்சத்தை திருப்பி கொடுக்குமாறு பாலாஜியிடம் கேட்டுள்ளனர். பாலாஜி கதிரவனிடம் கொடுத்துள்ளதாகவும், விரைவில் பெற்று தந்து விடுவதாகவும் தெரிவித்துள்ளார். இதில் ஏற்பட்ட தகராறில் 5பேரும் சேர்ந்து பாலாஜியை காரில் கடத்தி சென்றுள்ளது போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் பணத்துடன் மாயமான கதிரவனையும் தேடி வருகின்றனர். அவர் பிடிபட்டால் இந்த சம்பவம் குறித்து மேலும் பரபரப்பு தகவல்கள் வெளியாகும் என போலீசார் தெரிவித்தனர்.

# ஆனந்தம் ரோட்டரி சங்கத்தின் சார்பில் அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

திருப்பூர், ஆக 19
திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வெள்ளிர வெளி அரசு மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா நடைபெற்றது .விழாவில் வெள்ளிர வெளி பஞ்சாயத்து தலைவர் சிவன்மலை தேசிய கொடி ஏற்றி வைத்தார்.

பின்னர் திருப்பூர் ரோட்டரி ஆனந்தம் சங்கத்தின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.


திருப்பூர் ரோட்டரி ஆனந்தம்சங்கத்தின்தலைவர் ஏ.பி. அருண் பழனிசாமி தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ரோட்டரி ஆளுநர் எம்.டி. டாக்டர் சுந்தர்ராஜன், சென்னை சிப்காட் அதிகாரி கார்த்திகேயன் மற்றும் குன்னத்தூர் காவல் ஆய்வாளர் அம்பிகா ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளிடையே சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அதன்படி வெள்ளிரவெளி அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம்வகுப்பு, 12ம்வகுப்பு, 11ம் வகுப்பு, தேர்வில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு தலா ரூ.10,000 வீதம் 10 மாணவ மாணவிகளுக்கு ரூ.1லட்சம் வழங்கப்பட்டது. அதேபோல் கல்வி மற்றும் மருத்துவ உதவி தொகை ,மாற்றுத்திறனாளிக்கு சக்கர நாற்காலி, சலவை தொழிலாளிகளுக்கு சலவை பெட்டிகள் என ரூ.2லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்த நலத்திட்ட உதவிகள் ஆனந்தம் ரோட்டரி சங்க தலைவர் அருண் பழனிச்சாமியின் தந்தை கே. பழனிச்சாமி கவுண்டர் நினைவாக தொடர்ந்து 15வது ஆண்டாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் ரவி , ஆனந்தம் ரோட்டரி செயலாளர் கௌரிசங்கர், பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம், பொருளாளர் பலவேசம், பயிற்சியாளர் பாலசுந்தரம், ஒருங்கிணைப்பாளர் முத்துராமலிங்கம், மண்டல ஒருங்கிணைப்பாளர் சின்னசாமி, மாவட்ட உதவி ஆளுநர் ஹரி விக்னேஷ் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 1,250 சிறப்பு பஸ்கள் இயக்கம்



சென்னை, ஆக. 19
தொடர் விடுமுறை நாட்கள், பொது விழாக்கள், கூபமுகூர்த்த நாட்களில் சென்னையில் இருந்தும், பிற இடங்களில் இருந்தும் பொதுமக்களின் வசதிக்காக கூடுதல் விரைவு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக அரசு விரைவு போக்குவரத்து கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: வரும் 20ந்தேதி மற்றும் 21ந்தேதி ஆகிய தொடர் வளர்பிறை முகூர்த்த நாட்களை முன்னிட்டு, 18 ந்தேதி (நேற்று) 19ந்தேதி (இன்று) ஆகிய நாட்களில் சென்னையில் இருந்தும், பிற இடங்களில் இருந்தும், கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்படி சென்னையில் இருந்து தமிழகத்தின் முக்கிய இடங்களுக்கு 18ந்தேதி (நேற்று) கூடுதலாக 500 சிறப்பு பஸ்களும், 19 ந்தேதி (இன்று) 350 பஸ்களும் இயக்கப்படும். மேலும் பல்வேறு இடங்களில் இருந்து அதாவது கோவை, மதுரை, நெல்லை, திருச்சி, சேலம் போன்ற இடங்களில் இருந்து முக்கிய இடங்களுக்கும் மற்றும் பெங்களூருவில் இருந்து பிற இடங்களுக்கும் 400 சிறப்பு பஸ்கள் என மொத்தம் 1,250 பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டு உள்ளது. இதுமட்டுமின்றி, ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டு உள்ளது. சிறப்பு பஸ் இயக்கப்படுவதை கண்காணிக்க அனைத்து பஸ் நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக பஸ்களில் ஒரு மாதத்தில் 5 முறைக்கு மேல் ஒரே தடத்தில் பயணம் செய்ய முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு சிறப்பு சலுகையாக, அடுத்து வரும் தொடர் பயணங்களுக்கு அதாவது 6வது பயணம் முதல் 50 சதவீத கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. இதன்படி இத்திட்டத்தின் மூலம் மே 8ந்தேதி முதல் ஆகஸ்டு 15ந்தேதி வரை 1,682 பயணிகளுக்கு இச்சலுகை வழங்கப்பட்டு உள்ளது. மேற்கூறிய சலுகையை பெற பயணிகள் முன்பதிவு செய்து பயணிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


# நிலம் கொடுத்தவர்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி நாய்க்கு தாலி கட்டி விவசாயிகள்: நூதன போராட்டம்



மூலனூர், ஆக. 19
விவசாயிகள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நிலம் கொடுத்த விவசாயிகள் உரிய இழப்பீட்டுத் தொகை கேட்டு 2003ம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர்.

திருப்பூர் மாவட்டம் மூலனூரை அடுத்த பொன்னிவாடி கிராமத்தில் நல்லதங்காள்நீர்த்தேக்க அணை உள்ளது. இந்த அணையை கட்டுவதற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக்கோரி அப்பகுதி விவசாயிகள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பொன்னிவாடி கிராமத்தில் உள்ள நல்லதங்காள் ஓடை நீர்தேக்க அணை கட்டுமான பணிக்காக 150 விவசாயிகளிடமிருந்து 750 ஏக்கர் நிலத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடந்த 1997ம் ஆண்டு கையகப்படுத்தி 2000ம் ஆண்டு அணை கட்டுமான பணிகளை தொடங்கினர். அப்போது விவசாயிகளிடம் அணை கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. நிலம் கொடுத்த விவசாயிகள் உரிய இழப்பீட்டுத் தொகை கேட்டு 2003ம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். வழக்கில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு தொகை மற்றும் அதற்கு உரிய வட்டியை சேர்த்து அவர்களுக்கு வழங்க வேண்டும் என 2019ம் ஆண்டு நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. இருப்பினும் விவசாயிகளுக்கு பொதுப் பணித்துறை அதிகாரிகள் உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கவில்லை. இதனால் பாதிப்படைந்த விவசாயிகள் நீதிமன்ற உத்தரவின்படி ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பு தாராபுரம் ஆர்.டி.ஓ. அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்கள் ஜப்தி செய்யப்பட்டது. ஆனால் அதன் பிறகும் விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. இதனால் பாதிப்படைந்த விவசாயிகள் நல்லதங்காள் அணைப்பகுதியில் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி வந்தனர். இந்நிலையில் உரிய இழப்பீட்டு தொகை வழங்காததை கண்டித்து கோனேரிபட்டி கிராமத்தில் நல்லதங்காள் அணையில் இருந்து மண் எடுத்து வந்து அதை பூஜை செய்து அதன் பிறகு பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுக்கு உரிய இழப்பீடு தொகையை தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும் எனக்கோரி கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று 5வது நாளாக விவசாயிகள் கையில் கருப்பு கொடியுடன் வாயில் கருப்பு துணிகட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். 6வது நாளான இன்று அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நாய்க்கு தாலி கட்டி நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். 30 க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# விஜயகரிசல்குளம் அகழாய்வில் தங்கத்தாலி கண்டெடுப்பு



விருதுநகர், ஆக. 19
விஜயகரிசல்குளம் அகழாய்வில் தங்கத்தாலியும், செப்பு நாணயங்களும் கிடைத்தன. செப்பு நாணயங்களில் சிங்க உடல், யானை தலை, சங்கு போன்ற அடையாளங்களும் உள்ளன.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளத்தில் தொல்லியல் துறை சார்பில் 2ம் கட்ட அகழாய்வு பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்ட அகழாய்வில் பல்லாயிரக்கணக்கான பொருட்கள் கிடைத்த நிலையில், 2வது கட்ட அகழாய்விலும் வித்தியாசமான பொருட்கள், ஆபரணங்கள் கிடைத்து வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில், நேற்று ஒரு அகழாய்வு குழியை தோண்டிய போது, பழங்காலத்தில் பயன்படுத்திய அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தங்கத்தாலி கிடைத்தது. காண்பதற்கு வித்தியாசமானதாகவும், அதே நேரத்தில் ஆச்சரியப்படுத்தும் வகையிலும் இந்த தாலி உள்ளதாக தொல்லியல் அதிகாரிகள் தெரிவித்தனர். பண்டைய காலத்திலேயே ஆபரணங்களை நேர்த்தியாக வடிவமைப்பதில் நம் முன்னோர் நிபுணத்துவம் பெற்றவர்கள் என்பதற்கு இந்த தாலியே சிறந்த எடுத்துக்காட்டு என்றும் கூறினர். மதுரை நாயக்க மன்னர் ஆட்சி காலத்தில் முத்துவீரநாயக்கர் வெளியிட்ட நாணயம், செஞ்சி நாயக்கர் நாணயம் உள்பட 4 செப்பு நாணயங்களும் அகழாய்வு குழிகளில் இருந்து கிடைத்துள்ளன. இந்த செப்பு நாணயங்களில் சிங்க உடல், யானை தலை, சங்கு போன்ற அடையாளங்களும் உள்ளன. இதுவரை 16 அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டு உள்ளன. அதில் 12 குழிகள் 15 அடி ஆழம் வரை முழுமையாக தோண்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 2ம் கட்ட அகழாய்வில் இதுவரை 3,480 பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளதாக தொல்லியல் இயக்குனர் பொன் பாஸ்கர் தெரிவித்தார்.

# பல்லடத்தில் மாணவிக்கு பாலியல் தொல்லை தலைமறைவான பேராசிரியருக்கு போலீஸ் வலைவீச்சு



பல்லடம், ஆக. 19
போக்சோ சட்டத்தின் கீழ் மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். பேராசிரியர் பாலமுருகன் மருத்துவ விடுப்பில் உள்ளதால் இன்னும் அவரிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தனர்.

திருப்பூர்மாவட்டம்பல்லடம் காந்தி சாலையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளது. இந்த கல்லூரியில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இக்கல்லூரியின் தமிழ் துறை தலைவராக பாலமுருகன் பணியாற்றி வருகிறார். இவர் கடந்த ஓராண்டிற்கு முன்பாக நீலகிரி மாவட்டத்தில் இருந்து மாறுதலாகி பல்லடம் அரசு கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராக பணியில் சேர்ந்தார். இந்நிலையில் மாணவி ஒருவருக்கு அவர் பாலியல் தொல்லை கொடுத்ததாக ஆன்லைன் மூலமாக பெறப்பட்ட புகாரின் பேரில், திருப்பூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் நன்னடத்தை அலுவலர் பல்லடம் அனைத்து மகளிர்போலீஸ்நிலையத்தில் புகார் மனு அளித்தார். அதன்பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் பாலமுருகன் தலைமறைவாகி விட்டார்.அவரை போலீசார் வலைவீசி தேடி வருகினறனர். கல்லூரி நிர்வாகத்தினர் கூறுகையில்,புகார்குறித்து தனியாக விசாரணை குழு அமைக்கப்பட்டு மாணவிகளிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும், பேராசிரியர் பாலமுருகன் மருத்துவ விடுப்பில் உள்ளதால் இன்னும் அவரிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தனர்.

# நாய் கடித்ததில் 3 பேர் படுகாயம்



திருவோணம், ஆக. 19
பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பல இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர். 3 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

திருவோணம் அருகே உள்ள நெய்வேலி தென்பாதி மற்றும் வடபாதி கிராமங்களில் நாய்கள் அதிகமாய் சுற்றி திரிந்து வருகின்றனர். இதனால் பொது மக்களும், வாகன ஓட்டிகளும் பல இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர். இந்நிலையில் சம்பவத்தன்று நெய்வேலி கடை வீதி சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த நெய்வேலி தென்பாதி கிராமத்தை சேர்ந்த பாலமுருகன் (24), மருதேஷ், நெய்வேலி வடபாதி கிராமத்தை சேர்ந்த புவனேஸ்வரன், ஆகிய மூவரையும் சுற்றி திரிந்த வெறிநாய்கடித்தது. இதில் 3 பேரும் படுகாயம் அடைந்தனர். இதைத் தொடர்ந்து படுகாயம் அடைந்த 3 பேரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாய் தொல்லையை கட்டு ப்படுத்த அரசு நடவடி க்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஊத்துக்குளி,குன்னத்தூர் பேரூராட்சி வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை



திருப்பூர்,
பல்வேறு திட்டப்பணிகள் குறித்து தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்கள்நடத்தப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் அடிப்படை கோரிக்கைகள் குறித்து துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திருப்பூர், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியங்கள், ஊத்துக்குளி மற்றும் குன்னத்தூர்பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. திருப்பூர் கலெக்டர அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்துக்கு கலெக்டர் கிறிஸ்துராஜ் முன்னிலை வகித்தார். கூட்டத்துக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமை வகித்து பேசியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒருபகுதியாக திருப்பூர், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியங்கள், ஊத்துக்குளி மற்றும் குன்னத்தூர்பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், 15வது நிதிக்குழு மானியத்திட்டம், தமிழ்நாடு ஊரக கிராம சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஊராட்சி ஒன்றிய பொதுநிதி திட்டம் மற்றும் பிரதான் மந்திரி கிராம சாலைகள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. குடிநீர் விநியோகம், வடிகால், தெரு விளக்கு, சாலை, பொதுக் கழிப்பிடம், நியாய விலைக் கடை, சமுதாய நலக்கூடம், தொகுப்பு வீடுகள், பேருந்து மற்றும் நிழற்குடை, பள்ளிக் கட்டடம், சத்துணவு மையம், அங்கன்வாடி மையம், ஆரம்ப சுகாதார நிலையம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், கால்நடை மருத்துவமனை, மயானம் உள்ளிட்ட பொதுமக்களின் அடிப்படை கோரிக்கைகள் குறித்து துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டு கொண்டுவர வேண்டும் என்றார். ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், உதவி இயக்குநர் மதுமிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வாணி, திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊத்துக்குளி குன்ன த்தூர் பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட னர்.

# திருப்பத்தூர் நகர வி.சி.க சார்பில் அன்னதானம்



திருப்பத்தூர், ஆக. 19
500 பேருக்கு அன்னதானநிகழ்ச்சி திருப்பத்தூர் பஸ் நிலையம் அருகே நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் ஆனந்தன் தலைமை வகித்தார்.

மத்தூர், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் பிறந்த நாளை முன்னிட்டு 500 பேருக்கு அன்னதான நிகழ்ச்சி திருப்பத்தூர் பஸ் நிலையம் அருகே நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் ஆனந்தன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக மண்டல செயலாளர் சுபாஷ் சந்திர போஸ், மாவட்டச் செயலாளர் வெற்றி கொண்டான் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்து பேசினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட நகர ஒன்றியபேரூர்நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# 224 மோட்டார் சைக்கிள்களை உரிமையாளர் பெற்று செல்ல போலீசார் அழைப்பு

ஈரோடு, ஆக. 19
ஈரோடு மாவட்ட போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கேட்பாரற்று சாலையோரம் பல நாட்களாக நிறுத்தி வைக்க ப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை போலீசார் கண்டறிந்து 224 மோட்டார் சைக்கிள்களை மீட்டு ஈரோடுஆணைக்கல்பாளையத்தில் உள்ள ஆயுதப்படை வளாகத்தில் நிறுத்தி வைத்துள்ளனர். இந்த வாகனங்கள் குறி த்த விவரம் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு போலீஸ் நிலையம் வாரியாக மீட்கப்பட்ட மோட்டார்சைக்கிள் குறித்த தகவல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள்தங்களது மோட்டார் சை க்கிள் காணாமல் போயிரு ந்தால் தங்கள் பகுதியில் உள்ள போலீஸ் நிலை யத்தை அணுகி தங்களது மோட்டார் சைக்கி ள் எந்த நிறுவனத்தினுடையது, பதிவு எண் போன்ற விபரங்களை உரிய ஆதாரங்களுடன் தெரிவிக்கலாம். இந்த 224 மோட்டார் சைக்கிள்களும் 3 மாதங்கள்வரை ஆயுதப்படை வளாக த்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். உரிமையாளர்கள் யாரும் வாகனத்திற்கு உரிமைகோரவில்லை என்றால் அதன் பின் ஏல சட்ட விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு பொது ஏலம் விடப்படும் என போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பிரத்யங்கிரா தேவி கோவிலில் சகஸ்ர சண்டி யாகம்

மானாமதுரை, ஆக. 19

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வேதியரேந்தல் விலக்கு பகுதியில் பிரசித்தி பெற்ற மகா பஞ்சமுக பிரத்யங்கிரா தேவி கோவில் உள்ளது. இங்கு 24 மணிநேரமும் அன்னதானம் நடைபெறும். இங்கு ஆண்டு தோறும் பிரித்தியங்கிரா யாக பெருவிழா நடைபெறும். அதன்படி 21ம் ஆண்டு விழாவை முன்னிட்டு சகஸ்ர சண்டி யாகம் விழா கடந்த 16ந்தேதி மாலை தொடங்கியது. இந்த யாகம் தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறுகிறது. அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டி நடைபெறும் இந்த யாகத்தின் தொடக்கமாக கோயில் யாகசாலையில் புனிதநீர் கலசங்கள் வைத்து மகா கணபதி ஹோமம் நடந்தது. அதைத்தொடர்ந்து இரவு மகா பஞ்சமுக பிரத்யங்கிரா ஹோமம்



நடத்தப்பட்டது. தஞ்சை குருஜீ கணபதி சுப்ரமணியம் சாஸ்திரிகள் தலைமையில் ஏராளமான வேத விற்பன்னர்கள் யாகத்தை நடத்தினர். யாகத்தின் 2வது நாளாக வியாழக்கிழமை ருணமோஷன கணபதி ஹோமம், ருத்ர ஹோமம், பைரவபலி மண்டல பூஜை நடைபெற்றது. தொடர்ந்து 20ந்தேதி வரை தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறும் இந்த யாகத்தின்போது கோவில் யாகசாலையில் அமைக்கப்பட்டுள்ள யாக குண்டங்களில் விவசாயம் செழிக்கவும் அனைவரது குடும்பங்களிலும் சங்கடங்கள், துன்புங்கள் விலகி மகிழ்ச்சி, செல்வம், மங்களம். ஐஸ்வர்யம் உண்டாகவும் பல்வேறு ஹோமங்கள் நடத்தப்படுகிறது. குழந்தை வரம் வேண்டும் தம்பதியினருக்காக நாளை (19ந்தேதி) புத்திர காமேஷ்டி யாகம் நடைபெறுகிறது. யாகத்தின் கடைசி நாளான 20ந்தேதி காலை சகஸ்ர சண்டி யாகம் தொடங்கி மாலை வரை நடைபெறுகிறது. அதன் பின் பூர்ணாஹூதியாகி கடம் புறப்பாடு நடைபெற்று மூலவர் பிரத்யங்கிரா தேவிக்கு கலசநீரால் பாதசமர்ப்பணம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது. யாகத்தை கண்டு தரிசிக்க தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும் பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்து உள்ளனர். இவர்களுக்கு கோவிலில் தங்க இடம், 24 மணி நேரமும் அன்னதானத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் மதுரை, மானா மதுரை ஆகிய இடங்களில் இருந்து பிரத்யங்கிரா தேவி கோவிலுக்கு அரசு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. யாகத்துக்கான ஏற்பாடுகளை பஞ்சமுக பிரத்யங்கிரா வேததர்ம ஷேத்ரா டிரஸ்ட் நிர்வாகி ஞானசேகரன் சுவாமிகள், மாதாஜி ஆகியோர் செய்துள்ளனர்.

# தூய்மைப் பணியாளர்கள் பணியை புறக்கணித்து திடீர் போராட்டம்

திருச்சி, ஆக. 19

69 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இன்று காலை பணியை புறக்கணித்து நகராட்சி அலுவலக வாயிலில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்

திருச்சி மாவட்டம், மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் தூய்மை பணிகளை மேற்கொள்ள நிரந்தர தூய்மை பணியாளர்கள் உள்ள நிலையில் ஒப்பந்த அடிப்படையில் 69 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த பணியாளர்களுக்கு கடந்த மாதம் ஊதியம் வழங்கப்பட



வில்லை. இதனால் கடும் சிரமத்திற்கு ஆளான இவர்கள் இதுகுறித்து தொடர்ந்து சம்மந்தப்பட்ட நிறுவனத்திடம் வலியுறுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கபடவில்லை. இதனால் ஆத்திரமடைந்த தூய்மை பணியாளர்கள் காலை பணியை புறக்கணித்து நகராட்சி அலுவலக வாயிலில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து சம்பவம் பற்றி தகவல் அறிந்த நகராட்சி அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி ஊதியம் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதை அடுத்து தூய்மை பணியாளர்கள் போராட்டத்தை கைவிட்டு பணிகளுக்கு புறப்பட்டுச் சென்றனர். தூய்மைப் பணியில் ஈடுபடும் தங்களுக்கு முறையான ஊதியம் வழங்கிட வேண்டும், ஊதியத்தை உயர்த்தி வழங்கிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோத்தகிரியில் பூண்டு கொள்முதல் விலை உயர்வு

நீலகிரி, ஆக. 19

மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளில் தற்போது நீலகிரி பூண்டு அதிகபட்சமாக ரூ.400க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. விலை உயர்வு விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் தேயிலை சாகுபடிக்கு அடுத்தபடியாக மலைக்காய்கறி விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. அங்கு உள்ள விவசாயிகள் விளைநிலங்களை பதப்படுத்தி கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காலிபிளவர், முள்ளங்கி, நூல்கோல், பீன்ஸ், பூண்டு உள்ளிட்ட மலைக்காய்கறிகளை பயி



ரிட்டு வருகின்றனர்.

இதன் ஒருபகுதியாக கோத்தகிரி மற்றும் கட்டபெட்டு, பனஹட்டி, பில்லிக்கம்பை, கக்குச்சி, மிளிதேன், நெடுகுளா உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் முதல் போகமாக கடந்த ஜனவரி மாதமும், 2வது போகமாக ஏப்ரல் மாதத்திலும் பூண்டு பயிரிட்டு இருந்தனர். நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக போதிய மழை பெய்து உள்ளது. இதனால் அங்கு பூண்டு பயிர்கள் செழித்து வளர்ந்தது. எனவே விவசாயிகள் பூண்டுக்களை சாகுபடி செய்து விற்பனைக்காக அனுப்பி வருகின்றனர். மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளில் தற்போது நீலகிரி பூண்டு அதிகபட்சமாக ரூ.400க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த வாரம் 300 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. இதே போல சைனாரக பூண்டு கிலோ ரூ.140க்கு கொள்முதல் செய்யப்ப டுகிறது. இமாச்சலபிரதேசம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பூண்டு விதை வாங்குவதற்காக ஏராளமான வியாபாரிகள் மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளுக்கு வந்து செல்கின்றனர். இதனால் அங்கு நீலகிரி பூண்டின் கொள்முதல் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இது விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# செம்பதனிருப்பு ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்

சீர்காழி, ஆக. 19

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே செம்பத னிருப்பு ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் சுதந்திர தினத்தை ஒட்டி சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி முத்துக்குமரன் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், சீர்காழி ஒன்றிய குழு தலைவர் கமலஜோதி தேவேந்திரன், ஒன்றிய ஆணையர் சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சித் துணைத் தலைவர் அனிதா பார்த்திபன் வரவேற்றார். சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் மகா பாரதி கலந்து கொண்டு பொது மக்களிடம் குறை களை கேட்டு அறிந்து மனுக்



களை பெற்றுக் கொண்டார் .

அப்போது கிராமத்தை சேர்ந்த இளம் பெண் சாலை விரிவாக்க பணியின் போது தமது வீடு இட மாற்றம் செய்யப்பட்டதால் கழிப்பிட வசதி இல்லை என தெரிவித்தார். அதேபோல் அல்லிவிளாகம் பகுதியில் விவசாய நிலங்களை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

பின்னர் கலெக்டர் பேசுகையில், இந்த ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் செய்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீடுகள் தோறும் அவசியம் கழிவறை அமைத்திட வேண்டும் கழிவறை வசதி இல்லாத வர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி அணுகி நிதி உதவி பெறலாம். தமிழக அரசு செயல்படுத்தக் கூடிய அனைத்து விதமான திட்டங்க ளையும் பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். இந்த கூட்டத்தில் சீர்காழி தாசில்தார் செந்தில்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குனர் ஸ்ரீலேகா, உதவி இயக்குனர் மஞ்சுளா மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குனர் சேகர், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கார்த்திகேயன், வட்டார மருத்துவ அலுவலர் ராஜ்மோகன், திமுக பிரமுகர் முத்துக்குமரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் ஊராட்சி செயலர் செந்தில்குமார் நன்றி கூறினார். முன்னதாக கிராம சபை தீர்மானங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வமுத்து வாசித்தார். வேளாண்மை துறை மற்றும் சுகாதாரத் துறை மூலம் நலத்திட்ட உதவிகள் கலெக்டர் மூலம் வழங்கப்பட்டது.

# நிலக்கோட்டையில் மின்சாரம் தாக்கி எலக்ட்ரீசியன் பலி

நிலக்கோட்டை, ஆக. 19

நிலக்கோட்டை அருகில் உள்ள ஒட்டுப்பட்டியை சேர்ந்த முருகன் மகன் பாண்டியராஜன் (வயது23). எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வந்தார்.

நிலக்கோட்டை அரசு ஆஸ்பத்திரி அருகில் உள்ள ஒருவீட்டில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார்.

நிலக்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் வழியிலேயே உயிரிழந்தார்.

இது குறித்து நிலக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# இறந்தவர் உடலை வயல் வழியே தூக்கி செல்லும் அவலம்

திருவோணம், ஆக. 19

சாலை வசதி இல்லாததால் நெல் பயிரிடப்பட்ட வயல் வழியாக உடலை எடுத்து சென்றனர். மயானம் இருக்கும் இடத்திற்கு செல்வதற்கு சாலை வசதி இல்லை.

ஒரத்தநாடு அருகே உள்ள வெள்ளூர் கிராமத்தை சேர்ந்த சின்னப்பொண்ணு உடல் பாதிக்கப்பட்ட உயிர் இறந்தார். இந்நிலையில் அவரது உறவினர்கள் மற்றும் ஊர்



பொதுமக்கள் இவரது சடலத்தை ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சுடுகாட்டிற்கு எடுத்து செல்ல சாலை வசதி இல்லாததால் நெல் பயிரிடப்பட்ட வயல் வழியாக எடுத்து சென்றனர். பல ஆண்டுகளாக இப்பகுதியில் இறப்பு நேரிட்டால் சுடுகாடு மயானம் இருக்கு இடத்திற்கு செல்வதற்கு சாலை வசதி இல்லை. எனவே சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள், மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்த தஞ்சை மாற்றுத்திறன் பள்ளி மாணவர்கள்

தஞ்சாவூர், ஆக. 19

மாணவர்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் செயல்பட்ட வேண்டும். அனைவரையும் சமத்துவமாக கருதி சகோதர எண்ணத்துடன் மட்டுமே பழகுவேன்.

சமீப காலமாக உயர் கல்வி நிறுவனங்களில் தீண்டாமை கொடுமைகள் நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதை முற்றிலும் ஒழிக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்நிலையில், ஜோதி அறக்கட்டளை சார்பில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தஞ்சையில் உள்ள மாற்றுத்திறன் பள்ளி மாணவர்கள் "தீயை விட தீமை, தீண்டாமை" என்ற தலைப்பில் உறுதிமொழி எடுத்து கொண்ட



னர். தஞ்சை மேம்பாலம் அரசு செவித்திறன் குறைபாடு டையோர் பள்ளி மாணவர்களும், அரசு பார்வைத்திறன் குறைபாடுடையோர் பள்ளி மாணவர்களும் சேர்ந்து, 12ம் வகுப்பு மாணவர் ராமச்சந்திரன் தலைமையில் 'மாணவர்களாகிய நான் யாரையும் எந்த வித பாகுபாட்டுடன் நடத்தாமல் அனைவரையும் சமத்துவமாக கருதி சகோதர எண்ணத்துடன் மட்டுமே பழகுவேன்' என உறுதிமொழி எடுத்துக்கொ ண்டனர். மேலும் அவர்கள் கூறுகையில்: மாணவர்கள் அனைவரும் யாரிடமும் தீண்டாமையை கடைபிடிக்காமல் அனைவரிடமும் நல்லிணக்கத்துடன் செயல்பட்டு பெற்றோருக்கும், பள்ளிக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என தஞ்சாவூர் பள்ளி மாணவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என்றனர். நிகழ்ச்சியில் அரசு செவித்திறன் குறைபாடுடையோர் பள்ளி தலைமையாசிரியர் சக்ரவர்த்தி, அரசு பார்வைத்திறன் குறைபாடுடையோர் பள்ளி தலைமையாசிரியர் சோபியா மாலதி மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை ஜோதி அறக்கட்டளை செயலாளர் டாக்டர் பிரபு ராஜ்குமார் தலைமையில், அறக்கட்டளை மேலாளர் ஞானசுந்தரி, மேற்பார்வையாளர் கல்யாண சுந்தரம் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# திண்டுக்கல் அருகே கோவில் திருவிழாவில் பூக்குழி இறங்கி பக்தர்கள் நேர்த்திக்கடன்

திண்டுக்கல், ஆக. 19

பெரியாண்டவர்சாமி கரகம் ஜோடிக்கப்பட்டு, வான வேடிக்கையுடன், அபிஷேக ஆராதனை நடைபெற்றது. பின்னர் கிடா வெட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டுக்கல் பில்லம நாயக்கன்பட்டி அருகே கஸ்தூரி நாயக்கன்பட்டி உள்ளது. இங்கு பெரியாண்டவர், கஸ்தூரி அம்மன், முனிசாமி ஆகிய கோவில்கள் உள்ளது. இந்த கோவில்களில் 12ஆண்டு களுக்கு பிறகு



ஆடி திருவிழா நடைபெற்றது. கடந்த 1ஆம் தேதி காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் திருவிழா தொடங்கியது. செவ்வாய்க்கிழமை பெரியாண்டவர் சாமி கரகம் ஜோடிக்கப்பட்டு, வானவேடிக்கையுடன், அபிஷேக ஆராதனை நடைபெற்றது. பின்னர் கிடா வெட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கதிர் நரசிங்க பெருமாளுக்கு பொங்கல் வைத்து அபிஷேக ஆராதனை மற்றும் முனிசாமி கோவிலில் பொங்கல் வைத்து கிடா வெட்டி அபிஷேக ஆராதனை நடைபெற்றது. பின்னர் பெரியாண்டவர் கோவில் முன்பாக நூற்று க்கணக்கான பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அம்மன் ஆபரண பெட்டி, பெரி யாண்டவர் கரகம், முளைப்பாரி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அருகே உள்ள கங்கையில் விடப்பட்டது.

இதில் நூற்று க்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழா விற்கான ஏற்பாட்டினை ஊர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வாழ்த்து

மதுரை, ஆக.19

எஸ்ஸார் கோபி இல்ல திருமண விழா இன்று நடந்தது. அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

மதுரைமாநகர்மாவட்ட முன்னாள் தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் எஸ்ஸார் கோபி இல்ல திருமண விழா மதுரை வேலம்மாள் மருத்துவ கல்லூரி ஐடா ஸ்கட்டர் மண்டபத்தில் இன்று நடைபெற்றது. திருமண விழாவில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டு மணமக்கள் வெண்ணிலா (எ) மீனாமகேஷ் கிருஷ்ணன் ஆகியோரை நேரில் வாழ்த்தினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் மதுரை மாந



கர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்தினர். முன்னதாக நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, மூர்த்தி உள்பட தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் முக்கிய நிர்வாகிகள் வாழ்த்தினர்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் சுப்புலட்சுமி எஸ்ஸார் கோபி, காளிராஜன், சாந்தி தேவி, முருகையா பாண்டியன், வெள்ளையம்மாள், வில்லாபுரம் பகுதி கழகச் செயலாளர் கவுன்சிலர் போஸ் முத்தையா, அவனியாபுரம் மேற்கு பகுதி கழக செயலாளர் ஈஸ்வரன், பகுதி துணை செயலாளர் பிரபாகர், 84 வது வட்ட செயலாளர்கள் பாலா என்ற பாலசுப்பிரமணியன், கவுன்சிலர் குட்டி என்ற ராஜரத்தினம், சுபாஷ் சந்திர போஸ், சூரியவர்மன், கௌதம் போஸ், விஷ்ணுவர்தன் ஆகியோர் வரவேற்றனர். திருமண விழாவில், பகவதி, ரமேஷ், 84வது வட்ட துணைச் செயலாளர் விஜயன், அவனியாபுரம் தி.மு.க. மேற்கு பகுதி செயலாளர் ஈஸ்வரன், 84 வது வார்டு தி.மு.க. கவுன்சிலரும், வில்லாபுரம் பகுதி செயலாளருமாமன போஸ் முத்தையா, பத்ரி பாண்டியன், பத்ரி சரவணன், விக்கி சதீஷ் பிரண்ட்ஸ் கிளப், முனிச்சாலை ஆண்டவர் பைனான்ஸ் நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# பாம்பு கடித்து கூலித்தொழிலாளி சாவு

ஈரோடு, ஆக. 19


பாம்பு ஒன்று பழனிச்சாமியின் இடது காலில் கடித்தது. ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஈரோடு மாவட்டம் எழுமாத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் பழனிச்சாமி (வயது 53). இவர் கூலி வேலை செய்து வந்தார். இந்நிலையில் சம்பவத்தன்று பழனிச்சாமி வீட்டில் இருக்கும்போது திடீரென பாம்பு ஒன்று பழனிச்சாமியின் இடது காலில் கடித்தது. இதையடுத்து பழனிச்சாமியின் உறவினர்கள் அவரை மொடக்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் பழனிச்சாமி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். பின்னர் இது குறித்து பழனிச்சாமியின் மகன் நவீன் (23) மொடக்குறிச்சி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# என் வாழ்நாளின் மொத்த படத்திற்கும் இந்த ஒரு படம் சமம் வடிவேலு நெகிழ்ச்சி

மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின், வடிவேலு, ஃபகத் பாசில், கீர்த்தி சுரேஷ் நடிப்பில் ஜூன் 29ஆம் தேதி திரையரங்குகளில் வெளியான படம் 'மாமன்னன்'. ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் தயாரித்திருந்த இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருந்தார். பெரும் எதிர்பார்ப்பில் வெளியான இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று விமர்சன ரீதியாகவும் வருமான ரீதியாகவும் பெரும் வரவேற்பை பெற்றது. அதுமட்டுமல்லாமல்இப்படத்திற்குதிரைப்பிரபலங்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். 'மாமன்னன்' திரைப்படம்திரையரங்குகளில்வெளியாகி50நாட்களை கடந்துள்ளது. இதற்கான நிகழ்ச்சி சென்னையில் நேற்று




நடைபெற்றது. இதில் மாரிசெல்வராஜ், உதயநிதி ஸ்டாலின், கீர்த்தி சுரேஷ், வடிவேலு, ஏ.ஆர்.ரகுமான் கலந்துகொண்டுபடத்தில்பணிபுரிந்தகலைஞர்களுக்குப் பரிசுகள்வழங்கினர். இந்தநிகழ்ச்சியில்நடிகர்வடிவேலு பேசியதாவது, இன்று மிக மகிழ்ச்சியான நாள். உதயநிதி இந்த 'மாமன்னன்' திரைப்படத்தை மிகப்பெரிய வெற்றிப்படமாக மாற்றிவிட்டார். நான் எத்தனையோ நகைச்சுவை படம் செய்துள்ளேன். என் வாழ்நாளின் மொத்த படத்திற்கும் இந்த படம் சமமானதாக ஆகிவிட்டது.

என்னால் மறக்க முடியாத படம். மாரி செல்வராஜ் கதை சொன்னபோதே அவரிடம் மிகப்பெரிய தெளிவு இருந்தது. 30 படத்திற்கான கதை அவரிடம் இருந்தது. இந்தப் படத்தை கண் இமைக்காமல் பார்க்க வைத்தது ஏ.ஆர் ரகுமான் தான் அவருக்கு நன்றி. இந்த படத்தில் பல காட்சிகள் என்னைத் தூங்கவிடவில்லை, உலுக்கி எடுத்துவிட்டது. ஒவ்வொரு காட்சியிலும் உயிர் இருந்தது. பலர் என்னை இப்படத்திற்காக அழைத்துப் பாராட்டினார்கள், மாரி செல்வராஜ் மேன்மேலும் வளர வேண்டும். அவர் நகைச்சுவை படம் எடுக்க வேண்டும். இந்த வாய்ப்பை தந்த ரெட் ஜெயன்ட் மூவிஸ்க்கு மிகப்பெரிய நன்றி. இந்த மேடையில் இருப்பது மிகப்பெரிய மகிழ்ச்சி என்று பேசினார்.

# பிரபாஸுக்கு ஜோடியாகும் நிதி அகர்வால்.. எந்த படத்தில் தெரியுமா?

நாக்அஸ்வின்இயக்கத்தில்பிரபாஸ்'கல்கி2898ஏடி'படத்தில்நடித்துவருகிறார். இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

தெலுங்குதிரையுலகின்முன்னணிநடிகரானபிரபாஸ், இயக்குனர்நாக்அஸ்வின் இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் 'கல்கி 2898 ஏடி' (KALKI 2898AD) படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் தீபிகா படுகோனே, அமிதாப் பச்சன், கமல், திஷா பதானி, உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். சயின்ஸ் ஃபிக்சன் படமாக உருவாகும் இப்படத்தை வைஜெயந்தி மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இதைத்தொடர்ந்து, பிரபாஸ், இயக்குனர் மாருதி இயக்கத்தில் 'ராஜா டீலக்ஸ்' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது. இந்நிலையில், இப்படத்தின்கதாநாயகி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'ராஜா டீலக்ஸ்' திரைப்படத்தில் நடிகை நிதி அகர்வால் இணைந்துள்ளார். இதனை தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள இயக்குனர் மாருதி இது தொடர்பான பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகள் மற்றும் விரைவில் படப்பிடிப்பு தளத்தில் உங்களை காணலாம்" என்று குறிப்பிட்டுள்ளார். 'ராஜா டீலக்ஸ்' திரைப்படத்தில் நிதி அகர்வால் இணைந்துள்ளது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.





# படப்பிடிப்பை தொடங்கிய நிகில் சித்தார்த் படக்குழு



நிகில் சித்தார்த்தின் 20வது படத்தை பரத் கிருஷ்ணமாச்சாரி இயக்குகிறார். இப்படம் தமிழ் உட்பட ஐந்து மொழிகளில் உருவாகவுள்ளது.

தெலுங்கு திரையுலகின் பிரபல நடிகரான நிகில் சித்தார்த், ஹேப்பி டேஸ் படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். பின்னர், அவர் யுவதா, சுவாமி ராரா, கார்த்திகேயா, கார்த்திகேயா 2 போன்ற படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். இயக்குனர் பல்னட்டி சூர்ய பிரதாப் இயக்கத்தில் நிகில் சித்தார்த் நடித்த '18பேஜஸ்'திரைப்படம்கடந்தஆண்டுவெளியாகிகலைவையானவிமர்சனங்களை பெற்றது. சுயம்பு போஸ்டர் இதைத்தொடர்ந்து நிகில் சித்தார்த்தின் 20வது படத்தை மிஷ்கினிடம் பணியாற்றிய பரத் கிருஷ்ணமாச்சாரி இயக்குகிறார். 'சுயம்பு' என பெயரிடப்பட்டுள்ள இப்படம் தமிழ் உட்பட ஐந்து மொழிகளில் உருவாகவுள்ளது.இந்நிலையில்,இப்படத்தின்புதியஅப்டேட்வெளியாகியுள்ளது. அதன்படி, 'சுயம்பு' படத்தின் படப்பிடிப்பு இன்று துவங்கியுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர்.

# ரசிகர்கள் அறியாத பக்கம்.. யார் இந்த வசந்த் ரவி..?



நடிகர்வசந்த்ரவிவித்தியாசமானகதைக்களங்களில் நடித்து வருகிறார். இவர் 'ஜெயிலர்' திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

தமிழ் திரையுலகில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர் வசந்த் ரவி. புகழ் பெற்ற நம்ம வீடு வசந்த பவன் ஹோட்டலின் உரிமையாளார் முத்துகிருஷ்ணனின் மகனான இவர் இங்கிலாந்தில் மருத்துவராக புணிபுரிந்து வந்தார். பின்னர் நடிப்பு மீது கொண்ட காதலால் 2017ஆம் ஆண்டு இயக்குனர் ராம் இயக்கத்தில் வெளியான 'தரமணி' திரைப்படத்தில் நடித்து கதாநாயகனாக அறிமுகமானார். 'தரமணி' படத்தில் இவரது நடிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. இந்த படத்தில் நடித்ததற்காக சிறந்த அறிமுக நாயகனுக்கான விருதுகளை பெற்றார். தொடர்ந்து இயக்குனர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் இவர் நடிப்பில் கடந்த 2021ஆம் ஆண்டு வெளியான 'ராக்கி' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. அதுமட்டுமல்லாமல் 'அஸ்வின்ஸ்' திரைப்படம் மூலம் ரசிகர்கள் மத்தியில் தனக்கான இடத்தை பிடித்தார். இவ்வாறு ஒவ்வொரு திரைப்படத்திலும் வித்தியாசமான கதைக்களத்தை தேர்ந்தெடுத்து நடிக்கும் வசந்த் ரவி இயக்குனர் நெல்சன் இயக்கத்தில் வெளியான 'ஜெயிலர்' திரைப்படத்தில் ரஜினியின் மகனாக நடித்துஅனைவரின் கவனத்தையும் தன் மீது திருப்பியுள்ளார். இப்படம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்று வரும் நிலையில் இவருக்கு மிகப்பெரிய மைல்கல்லாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# ஜூனியர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் இந்திய வீராங்கனை பிரியா மாலிக்குக்கு தங்கம்



20 வயதுக்குட்பட்டோர் ஜூனியர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி ஜோர்டானில் நடந்து வருகிறது. இதில் பெண்களுக்கான 76 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் பிரியா மாலிக் தங்கம் வென்றார். அவர் இறுதிப் போட்டியில் ஜெர்மனியின் லாரா செலிவ் குஹனை 50 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தினார். பிரியா மாலிக்குக்கு இடது கண்ணுக்கு மேலே காயம் ஏற்பட்டது. ரத்தம் வழிந்த போதிலும் அவர் வெற்றி பெற்று அசத்தினார். இதன் மூலம் அவர் ஜூனியர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற 2வது இந்திய வீராங்கனை என்ற சிறப்பை பெற்றார். கடந்த ஆண்டு ஆன்டிம் பங்கல் தங்கம் வென்று இருந்தார். தற்போதைய போட்டித் தொடரில் ஆன்டிம் பங்கல், 53 கிலோ எடைப்பிரிவில் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அயர்லாந்துக்கு எதிரான முதல் டி20 போட்டி டாஸ் வென்ற இந்திய அணி பவுலிங் தேர்வு



இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்தில் பயணம் செய்து 3 போட்டிகள்கொண்டடி20தொடரில் விளையாடுகிறது. கேப்டன் ஹர்திக் பாண்ட்யா, சுப்மன் கில், சூர்யகுமார் யாதவ், குல்தீப் யாதவ், சஹல் உள்ளிட்ட முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அணிக்கு வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தலைமை தாங்குகிறார். ருதுராஜ் கெய்க்வாட், ஜெய்ஸ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங், வாஷிங்டன்சுந்தர், ஷிவம்துபே, ஷபாஸ் அகமது, சஞ்சு சாம்சன், ஜிதேஷ் ஷர்மா, ரவி பிஷ்னோய், பிரசித் கிருஷ்ணா, அர்ஷ்தீப்சிங், முகேஷ்குமார், அவேஷ்கான் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர். இந்திய அணியில் ரிங்கு மற்றும் ப்ரஷித் கிருஷ்ணா அறிமுகமாகினர். இந்நிலையில், இந்தியா, அயர்லாந்து அணிகள் மோதும் முதல் டி20 போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு தொடங்கியது. இந்த ஆட்டத்திற்கான டாஸ் போடப்பட்டது. இதில், டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் பும்ரா பவுலிங் தேர்வு செய்தார். இதையடுத்து அயர்லாந்து அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் 3வது சுற்றில் ஜெசிகா பெகுலா வெளியேறினார்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. கடந்த 12ம் தேதி தொடங்கிய இத்தொடர் 20ம் தேதி வரை நடைபெறுகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று போட்டிகள் நடந்தன. இதில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, செக் நாட்டு வீராங்கனை மேரி போஸ்கோவாவுடன் மோதினார். இதில் போஸ்கோவா 64, 60 என்ற செட் கணக்கில் எளிதாக வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.





# முதல் டி20 போட்டி இந்தியா, அயர்லாந்து அணிகள் மோதல்

இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்தில் பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. கேப்டன் ஹர்திக் பாண்ட்யா, சுப்மன் கில், சூர்யகுமார் யாதவ், குல்தீப் யாதவ், சஹல் உள்ளிட்ட முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அணிக்கு வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தலைமை தாங்குகிறார். ருதுராஜ் கெய்க்வாட், ஜெய்ஸ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங், வாஷிங்டன் சுந்தர், ஷிவம் துபே, ஷபாஸ் அகமது, சஞ்சு சாம்சன், ஜிதேஷ் ஷர்மா, ரவி பிஷ்னோய், பிரசித் கிருஷ்ணா, அர்ஷ்தீப்சிங், முகேஷ்குமார், அவேஷ்கான் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர். இந்நிலையில், இந்தியா, அயர்லாந்து அணிகள் மோதும் முதல் டி20 போட்டி இன்று நடைபெறுகிறது. இதனையொட்டி இந்திய அணி வீரர்கள் நேற்று பயிற்சியில் ஈடுபட்டனர். பால்பிரீன் தலைமையிலான அயர்லாந்து அணி இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்து முதல் முறையாக வெற்றி பெறும் ஆர்வத்தில் இருக்கிறது. இன்றைய ஆட்டம் இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

# டிம் சவுத்தி 5 விக்கெட் முதல் டி20 போட்டியில் 19 ரன் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி

நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு எமிரேட்சில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி நேற்று துபாயில் நடைபெற்றது. டாஸ் வென்ற யுஏஇ அணி பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 155 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக டிம் சைபர்ட் 55 ரன்கள் எடுத்தார். கோல் மெக்கன்சி 31 ரன்னும், நீஷம் 25 ரன்னும் எடுத்தனர். இதையடுத்து, 156 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் யு.ஏ.இ. அணி களமிறங்கியது. விக்கெட் கீப்பர் அயனாஷ் ஷர்மா ஓரளவு போராடி 60 ரன்கள் சேர்த்தார். மற்றவர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், யு.ஏ.இ. அணி 136 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் நியூசிலாந்து அணி 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனல் டி20 தொடரில் நியூசிலாந்து 10 என முன்னிலை பெற்றது. 5 விக்கெட் வீழ்த்திய டிம் சவுத்தி ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.